அடிப்படையில், காளையார்கோவிலை மையமாக வைத்து, காளையார்கோவில் முதல் நாட்டரசன்கோட்டை, அதேபோல, காளையார்கோவிலிலிருந்து சேத்தூர், காளையார்கோவிலிலிருந்து பாகனேரி என்று காளையார்கோவிலை மையமாக வைத்து, கூடுதலாக நகரப் பேருந்துகளை இயக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அப்படி பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டம் ஏற்படுத்திய காரணத்தினால், புதிய நகரப் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்தப் பேருந்து வழித்தடங்களில் பயணிகளின் அடர்விற்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 363, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

363—

சமுதாயக் கூடம்

***41310—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், செங்குளம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோமூலம் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், செங்குளம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு புதிய சமுதாயக் கூடம் கட்ட தற்போதைய நிலையில் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் எண்ணுகிற எண்ணமெல்லாம் நிறைவேற என்னால் ஈடுசெய்து அவற்றைக் கொடுக்கமுடியும் என்ற அடிப்படையில், மக்களுடைய முன்னேற்றத்திற்கு வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிற, தமிழ்த்தாயினுடைய தலைமகள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த திருமங்கலம் நகரிலுள்ள நீதிமன்றத்தை சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தி, கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை வழங்கியமைக்கும், திருமங்கலம் நகரத்திலிருந்து மதுரை விமான நிலையம் செல்லக்கூடிய சாலையில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க அறிவித்ததற்கும், வேங்கடசமுத்திரம், வடகரை, அணைக்கட்டு, காட்டுபத்திரகாளியம்மன் கோயிலுக்கு இரு தரைமட்டப் பாலங்கள் வழங்கியமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், செங்குளம் கிராமம் என்பது அதிகமாக ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதி. அங்கிருக்கின்ற மக்கள் தங்கள் இல்லங்களில் சிறிய விசேஷங்கள் வைக்கவேண்டுமென்றாலும், சமுதாயக் கூடம் இல்லாமல் மிகுந்த

சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதிக்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித் தருவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில், கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சமுதாயக் கூடம் வேண்டுமென்று அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு, இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையின் முக்கியத்துவம், சமுதாயக் கூடம் கட்ட இடவசதி மற்றும் நிதி நிலைமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமையின் அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்டித்தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 364, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*